பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 8 (24—11—71) புதன் வெளியூர்: கார்த்திகை 9 (25—11—71) வியாழன் [இதழ்: 135

தும்பா ஏவுகணை நிலையப் பாதுகாப்புப் பொறுப்பு

மத்திய தொழில் பாதுகாப்புப் படை ஏற்றுக்கொண்டது

திருவனந்தபுரம், நவ. 24— தும்பா ஏவு கணை நிலையத்தின் பாதுகாப்புப் பொறுப்பை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை மேற்கொண்டிருக்கிறது; இதற்காக 130 பேர் வந்து சேர்ந்தனர்.

ஏற்கனவே இங்கு பாதுகாப்புப் பொறுப்பை மேற்கொண்டிருந்தவர்களும் ஒப்புதல் தெரிவித்ததன் மீது இப்படையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

டாக்கா நகர் துண்டிப்பு

இஸ்லாமாபாத்தில் இராசதந்திரிகள் நடமாட்டம் அதிகரிப்பு

விமான — இரயில் போக்குவரத்து ரத்து

டாக்கா, நவ. 24-

பாகிஸ்தான் முழுவதிலும் அவசர நிலையை அதிபர் யாகியா கான் பிறப்பித்ததைத் தொடர்ந்து, இஸ்லாமாபாத்தில் இராஜதந்திரிகளின் நடமாட்டங்கள் தீவிரமாகியிருக்கின்றன.

போர் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன; இராணுவத் தளபதிகளும் — அதிகாரிகளும் இரவு பகலாகப் போர் ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

'அந்நிய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்' இருப்பதைத் தொடர்ந்து மோசமான நிலைமை எழுந்துள்ளதால், அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது - என்று பாகிஸ்தான் வானொலி கூறியது.

பாகிஸ்தானின் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு விட்டதால் டாக்கா நகரம், கிழக்கு வங்காளத்தின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டது.

விமானப் போக்குவரத்துத் தவிர அரசுக்குச் சொந்தமான பஸ் போக்குவரத்துக்களும் ரத்து செய்யப்பட்டு விட்டன.

சில இரயில் போக்குவரத்துக்களும் ரத்து செய்யப்பட்டுவிட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

வங்க தேசக் கொரில்லா வீரர்களின் நடவடிக்கைகளே இவை அனைத்துக்கும் காரணம் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இன்று இரவு டாக்காவில் விமான எதிர்ப்பு ஒத்திகைகள் நடத்தப்படுகின்றன.

கப்பற் படையைப் பலப்படுத்த நடவடிக்கை

போர் நெருக்கடி முற்றிவருவதைத் தொடர்ந்து, கப்பற்படையைப் பலப்படுத்துவதில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கிறது; பாகிஸ்தான் வியாபாரக் கப்பல்கள் எல்லாம் கப்பற்படைத் தளபதியின் பொறுப்புக்கு விடப்பட்டன; பாகிஸ்தான் கப்பல் போக்குவரத்து முழுவதையும் கப்பற்படைதான் கவனிக்கும்.

இந்தத் தகவல், வங்காளக் குடாக் கடலில் சென்றுகொண்டிருக்கும் பாகிஸ்தான் கப்பல்களுக்கு கம்பியில்லாத் தந்தி (வயர்லஸ்) மூலம் தெரிவிக்கப்பட்டது; வங்காள தேசத்திலுள்ள சிட்டகாங் துறைமுகத்திலிருந்து இந்தத் தகவல் அனுப்பப்பட்டது.

சென்னை — திருவொற்றியூரில் மத்திய அரசின் அஞ்சல் — தந்தி துறையின் 'வயர்லெஸ் நிலையம்' இருக்கிறது; கப்பல்களுக்குப் பாகிஸ்தான் தளபதி அனுப்பிய ரேடியோ தகவல் இந்த நிலையத்தில் உள்ள கருவிகளில் பதிவாகியது.

பாகிஸ்தானின் மிகப் பெரிய பயணிகள் கப்பலான 'சபினு-இ-சஜ்ஜ்', ஹஜ் பயணிகளுடன் ஜெட்டாவுக்குப் புறப்படுவதாக இருந்தது; ஆனால் அதன் பயணம் தற்போதைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

"சில தவிர்க்க முடியாத காரணங்களால் பயணம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது" என்று துறைமுக அதிகாரிகள் அறிவித்தனர்.

இக்கப்பலில், பாகிஸ்தான் பயணிகளின் முதல் குழு மெக்காவுக்குச் செல்வதாக இருந்தது; அந்தக் கப்பல் எப்போது புறப்படும் எனப் புதிய தேதி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

கிழக்கும் பாகிஸ்தான் சிவில் பாதுகாப்புப் படையின் தலைமை அலுவலகத்திற்கு எதிரில் ஏற்பட்ட ஒரு வெடி விபத்தைத் தொடர்ந்து போலீசார், தங்கள் மனம்போனபடிச் சுட்டனர்; இதனால் மூவர் கொல்லப்பட்டனர்.

பூட்டோ — மாலிக்குடன் அவசர ஆலோசனை

அவசர ஆலோசனைக்காகப் பூட்டோவையும் — கிழக்கு வங்கக் கவர்னர் ஏ. எம். மாலிக்கையும் அதிபர் யாகியா கான், இராவல்பிண்டிக்கு அழைத்திருக்கிறார்.

பூட்டோவும் — மாலிக்கும், இந்தியா தாக்குதல் நடத்துவதாகக் குற்றஞ்சாட்டிப் பேசினர்.

கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த அரசுத் தொடர்பாளர் ஒருவர் 'போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது' என்றே குறிப்பிட்டார்; வங்க தேச விடுதலைப் படையினர் இந்தியாவுக்கு உதவி செய்துவருவதாகவும், தங்களை இந்தியா தாக்குவதால் தாங்களும் திருப்பித் தாக்கிவருவதாகவும் அவர் கூறினார்.

மேற்கு பகுதியில் பாகிஸ்தான் படையெடுக்கும்?

புதுடில்லி, நவ. 24—

"இராவல்பிண்டியில் போர்க் காய்ச்சல் உச்ச கட்டத்தை எட்டியிருக்கிறது" என்று பி.பி.சி. செய்தியாளர் கூறுகிறார்.

"கிழக்கு வங்கத்தில் இந்தியா தாக்குவதாகக் கூறப்படுவதற்குப் பதிலாக, மேற்குப் பகுதி எல்லையில் பாகிஸ்தான் தாக்குதலில் ஈடுபடும்" என்று இராவல்பிண்டியில் பரவலாகக் கருத்து நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

விமானத் தளங்களைத் தாக்குவதற்குத் திட்டம்

இந்திய விமானத் தளங்களைத் தாக்குவதற்குப் பாகிஸ்தான் திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

பாதுகாப்புக் கவுன்சிலில்

புகார் செய்யுமாம்

தாக்குதலைத் தொடங்குமுன் பாகிஸ்தான், இந்தியா தாக்கியதாகப் பாதுகாப்புக் கவுன்சிலில் புகார் செய்யுமென்றும் இராவல்பிண்டியில் கருத்து நிலவுகிறதாம்.

துணைக் கண்டத்தின் நிலைமையை அமெரிக்க — இரஷ்ய — சீனத் தூதுவர்களை அழைத்துப் பாகிஸ்தான் வெளிநாட்டுத் துறை விளக்கியிருப்பதாகவு தெரியவருகிறது.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின்

அவசர நிலைப் பிரகடனத்தின்....

உள்நோக்கம் என்ன?

தலைமையமைச்சர் ஆலோசனை

முப்படைத் தலைவர்கள் கலந்துகொண்டனர்

புதுடில்லி, நவ. 24—

பாகிஸ்தான் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தமது உயர்தர ஆலோசகர்களுடன் உடனடியாகக் கலந்தாலோசித்தார்.

இன்று எதிர்க் கட்சித் தலைவர்களிடம் நிலைமையை எடுத்துரைத்து விவாதிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்.

மத்திய அமைச்சரவையின் அரசியல் நிர்வாகக் குழு, நிலைமையை ஆராய்ந்து ஒருமணி நேரம் விவாதம் நடத்தியது.

நிலைமை எப்படி இருக்கிறது என்பதை மதிப்பிடுவதற்காக முப்படைத் தலைவர்களும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்ட பாகிஸ்தான் கோரக்கூடிய நிலையையும் அரசியல் விவகாரக் குழு பரிசீலனை செய்தது.

பாகிஸ்தான் அவசர நிலையைப் பிரகடனம் செய்திருப்பது, இங்குள்ள அரசியல் வட்டாரத்தில் வியப்பை ஏற்படுத்தவில்லை; 'வங்க தேசப் பிரச்சினையை, அனைத்துலகப் பிரச்சினையாக்கும் பாகிஸ்தான் முயற்சிப்பதன் ஒரு பகுதியே இது' என்று இங்கு கருதப்படுகிறது.

அமெரிக்கா — இரஷ்யா அவசர ஆலோசனை

போர் மூளாமல் தடுக்க நடவடிக்கை

வாஷிங்டன், செப். 24

இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே போர் மூளாமல் தடுப்பதற்கான வழிவகைகளைப் பற்றி இரஷ்யாவுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்துகிறது.

ஊ - தாண்ட் பெரும் கவலை

கிழக்கு வங்கத்திலுள்ள ஐ. நா. ஊழியர்களைத் திருப்பியழைக்க முடிவு

"கிழக்கு வங்கத்தில் உருவாகியிருக்கும் நிலைமை கவலைக்குரியதாக இருப்பதாக ஐ. நா. பொதுச்செயலாளர் ஊ—தாண்ட் கருதுகிறார்" என்று ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதட்ட நிலைமையைக் கருதி, கிழக்கு வங்கத்தில் இருக்கும் 40 ஐ. நா. ஊழியர்களைத் திருப்பி அழைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஐ. நா. அலுவலகம் பயன்படுத்தி வரும் டிரக்குகளையும் பாகிஸ்தான் இராணுவம் பறிமுதல் செய்துவிட்டதாம்; மொத்தம் ஆறு டிரக்குகளைக் கைப்பற்றியிருப்பதாகவும், உடனடியாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவைகளில் இரு டிரக்குகள் திருப்பித் தரப்பட்டிருப்பதாகவும், மீதி இன்னமும் ஒப்படைக்கப்படவில்லை என்றும் ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சென்ற சில வாரங்களில் பாகிஸ்தான் இராணுவப் படைகள் இந்திய எல்லைகளுக்கு அருகே குவிக்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து கவலையளிக்கும் நிலைமை எழுந்துள்ளது.

எந்த நிலைமையையும் சமாளிப்பதற்காக இந்தியாவும் தனது எல்லையில் தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

கடமையை நோக்கித் தமிழக மக்கள் செல்வர்

நாட்டைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வர்

சென்னை, நவ. 24—

"அவசர நிலையைப் பாகிஸ்தான் பிரகடனம் செய்திருக்கிறது; நாட்டில், நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது; இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்கத் தமிழக மக்கள் தயாராக இருப்பது அவசியமாகும்; நாட்டைப் பாதுகாக்க எந்தவிதத் தியாகத்திற்கும் தயாராக வேண்டும்.

"அடுத்து என்ன நடைபெறக்கூடும் என்பதை என்னால் கூற முடியவில்லை; ஆனால் ஒன்றை மட்டும் கூறுவேன் — 'தமிழக மக்கள் கடமையை நோக்கிச் செல்வார்கள்' என்று!

"இதனை நான், மத்திய அரசுக்கும் — குடியரசுத் தலைவருக்கும் — தலைமையமைச்சருக்கும் தெரிவித்து விட்டிருக்கிறேன்."

— ஆளுநர் கே. கே. ஷா

மீன் வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முயற்சி

இழுவைப் படகுகளைத் தமிழக அரசு வாங்கும்

குறிப்பிட்ட பகுதிகளில் மீன்களைக் கண்டுபிடிக்க உதவும்

சென்னை, நவ. 23—

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள மீன் வளப் பகுதிகள் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன; இவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தத் தமிழ்நாடு அரசு முடிவு செய்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கான 2 இழுவைப் படகுகளை வாங்க அரசு முடிவுசெய்திருக்கிறது; இந்த இழுவைப் படகுகள் கடலுக்கு நடுவில் சென்று -- குறிப்பிட்ட பகுதிகளில் எந்தெந்த வகை மீன்கள் கிடைக்கும் என்பதைக் கண்டுபிடித்துக் கூற உதவும்.

இந்தப் படகுகளின் மூலம் மீன் இருக்கும் பகுதிகளைக் கண்டுபிடித்து அதிக அளவில் மீன் பிடிக்க உதவுவதாக இருக்கும்.

இதுபோன்ற இழுவைப் படகுகளின் ஒவ்வொன்றின் விலை ரூ. 9 இலட்சம் ஆகும்; இதுபோன்ற 2 இழுவைப் படகுகளைத் தமிழ்நாடு அரசு வாங்க முடிவு செய்து இதற்குரிய 'ஆர்டர்'களைக் கொடுத்துவிட்டது; இந்த இழுவைப் படகுகள் அடுத்த மாத முடிவுக்குள் கிடைத்துவிடும்.

போலிச் சான்றுகள் தரும் மின்சாரக் காண்டிராக்டர்கள் லைசென்சுகள் ரத்து

அமைச்சர் ஓ. பி. இராமன் தரும் தகவல்

மதுரை, நவ. 24—

"ஒரு வேலையைத் தாங்கள் செய்யாமல் அதைச் செய்ததாகப் போலிச் சான்றுகள் தரும் மின்சாரக் காண்டிராக்டர்களின் லைசென்சுகளை ரத்துச் செய்வது பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது

"மின்சாரப் பணிகளை ஏற்று நடத்தும் காண்டிராக்டர்களுக்கு லைசென்சுகள் வழங்குவதற்குக் குறைந்தபட்சமாக இருக்க வேண்டிய படிப்புத் தகுதியிலிருந்து நீண்டகால அனுபவம் உள்ள காண்டிராக்டர்களுக்கு விதிவிலக்கு அளிப்பது பற்றி தமிழக அரசு ஆலோசித்து வருகிறது"

என்று தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்கள் தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற தமிழ்நாடு மின்சார லைசென்சு பெற்ற காண்டிராக்டர்கள் 4-வது மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"பொதுவாக லைசென்சு பெறாத காண்டிராக்டர்கள் மின்சாரப் பணி ஏற்று நடத்தால் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்; இப்படி யாராவது இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

மதுரை மேயர் எஸ் முத்து அவர்கள், மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

லைசென்சு பெற்ற மின்சார காண்டிராக்டர்களுக்கு லைசென்சு போர்டில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் -- பாரபட்சம் காட்டாமல் எல்லா காண்டிராக்டர்களுக்கும் லைசென்சு போர்டு லைசென்சு வழங்க வேண்டும் -- லைசென்சு பெறாத காண்டிராக்டர்கள் மின்சார வேலையை ஏற்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மின்சார இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் -- என்று கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வறட்சி -- வெள்ள நிவாரண உதவி

மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கிய விவரம்

புதுடில்லி, நவ. 23—

வறட்சி நிவாரணத்துக்கும்— வெள்ள நிவாரணத்துக்கும் நடப்பு ஆண்டில் மாநிலங்களுக்கு மத்திய அரசு ரூ. 50 கோடி நிதியுதவி வழங்கியிருக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் வழங்கிய நிதியுதவி விவரம் வருமாறு:—

உத்தரப் பிரதேசம்	ரூ. 18 கோடி
பீகார்	ரூ. 12.20 ,,
ஒரிசா	ரூ 6 ,,
மேற்கு வங்காளம்	ரூ. 5 ,,
மைசூர்	ரூ. 3 ,,
ஆந்திரம்	ரூ. 2 ,,
கேரளம்	ரூ. 32 இலட்சம்

ஒரிசாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை, அங்கு கடல் கொந்தளிப்பு ஏற்படுவதற்கு முந்திய தொகையாகும்.

வறட்சி நிவாரணம் கேட்டு வேறு சில மாநிலங்கள் அனுப்பிய கோரிக்கைகள் இன்னும் பரிசீலனையில் இருந்து வருகின்றன; அவைகளுக்கும் தொகை ஒதுக்கப்பட்டால் மத்திய அரசின் உதவித் தொகை ரூ. 50 கோடியைத் தாண்டிவிடும்.

ஏற்றுமதி வணிகர்களின் முறைகேடான செயல்

நடவடிக்கை எடுக்க அரசு ஆய்வு

புதுடில்லி, நவ. 24—

"சுமார் 100 கடல் வாணிப ஏற்றுமதியாளர்கள், அவர்களுடைய ஏற்றுமதி அடிப்படையில் வழங்கப்பட்ட இறக்குமதி லைசென்சுகளை பிறருக்கு விற்பதுபோன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது; அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு யோசித்து வருகிறது"

என்று ஏற்றுமதி வர்த்தகத்துறை துணையமைச்சர் ஏ. சி. ஜார்ஜ் நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

குறுகிய காலக் கடனுக்கு ரூ. 2,000 கோடி

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 24—

"நான்காவது திட்ட இறுதி ஆண்டில் வேளாண்மைத் துறையில் குறுகிய காலக் கடன் வசதிகளுக்கு ரூ. 2,000 கோடி தேவைப்படும் என்று அகில இந்திய கிராமப்புறக் கடன் ஆய்வுக் குழு மதிப்பிட்டிருக்கிறது; நான்காவது திட்ட இறுதியில் வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவைப்படும் நிதி வசதிகளில் கிடைக்கக்கூடிய வசதிகள் போக, ரூ. 900 கோடித் தொகையை கடன் வசதி நிறுவனங்களின் மூலம் பெறத் திட்டமிடப்பட்டிருக்கிறது"

என்று வேளாண்மைத் துறைத் துணையமைச்சர் ஏ. பி. ஷிண்டே, மக்களவையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நான்காவது திட்ட இறுதி ஆண்டில் ரூ. 700 கோடி குறுகிய காலக் கடன்களை கூட்டுறவு அமைப்புகள் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"வர்த்தகப் பாங்கிகள் விவசாயிகளுக்கு நேரடியாக ரூ. 400 கோடி கடன் தரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

"கடன் வசதிகளைப் பெறுவதில் சிறிய விவசாயிகளுக்கும், சிறிது இலாபம் பெறும் விவசாயிகளுக்கும் சலுகை அளிக்கப்படும்.

கோவையில் பணியாற்றும் தமிழக அரசு ஊழியர்கள்

ஐந்து சதவிகித நகர ஈட்டுப் படி பெறுவர்

வீட்டு வாடகைப் படியும் உயருகிறது

சென்னை, நவ. 24—

கோவை நகரிலும் -- அதனைச் சுற்றி 16 கிலோ மீட்டர் தொலைவு வரையில் உள்ள பகுதிகளிலும் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி அளிக்கத் தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இதன்படி, அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவிகிதம் அவர்கட்கு நகர ஈட்டுப் படியாக அளிக்கப்படும்.

கோவை நகரத்தை 'பி. 2' நகரமாக இந்த ஆண்டு பிப்ரவரி முதல் மத்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அங்கு பணியாற்றும் மத்திய அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி அளிக்கப்பட்டுவந்தது.

'இதேபோல், தமிழக என். ஜி. ஓ -க்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையைத் தமிழ்நாடு என். ஜி. ஓ -க்கள் சங்கம் வற்புறுத்திவந்தது; இப்போது இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து கோவை நகரிலும் -- அதனைச் சுற்றி 16 கிலோ மீட்டர் தொலைவு வரையில் உள்ள பகுதிகளிலும் அலுவலகங்களில் பணியாற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி வழங்க முன் தேதியிட்டு உத்தரவிட்டிருக்கிறது.

கோவை நகரில் உள்ள மாநில அரசு ஊழியர்கள் இதுவரை அடிப்படைச் சம்பளத்தில 5 சதவிகிதம் வீட்டு வாடகைப் படி பெற்றுவந்தனர்; இனி இது ஆறு சதவிகிதமாக உயர்த்திக் கொடுக்கப்படும்; அக்டோபர் முதல் தேதியிலிருந்து முன் தேதியிட்டு இது நடைமுறைக்கு வரும்.

ரூ. 800-க்குக் குறைவாகச் சம்பளம் பெறுவோருக்கு அதிகபட்சம் ரூ. 30 கிடைக்கும்.

இதேபோல், உள்ளாட்சித்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் (நகரசபை சிப்பந்திகள் போன்றோர்) — நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்கள் போன்றோருக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்படும்.

வயிற்றுக்குள்ளிருக்கும் சிசுவின் நாடித் துடிப்பு

அறிந்துகொள்ளக் கருவி

வயிற்றுக்குள் இருக்கும் முழு வளர்ச்சியடைந்த குழந்தையின் இருதயத் துடிப்பை அறிந்துகொள்ளும் ஒரு கருவியைப் பிரிட்டிஷ் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பிரசவ வலி எடுத்ததிலிருந்து, சிசு உலகுக்கு வரும்வரை தாயின் வாழ்வில் மறக்க முடியாத நேரம்; இவ்வளவு துன்பப்பட்டும் குழந்தைக்கு ஏதாவது ஆபத்து என்றால், அதை முன்கூட்டியே அறிந்துகொண்டு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க உதவி செய்கிறது இப்புதிய கருவி; குறிப்பாக அந்தக் கட்டத்தில் குழந்தைக்குச் சாதாரணமாக அதிர்ச்சி ஏற்படுகிறதாம்; அதனால் உடனடியாக அதன் இருதயத் துடிப்பு பாதிக்கப்படுமாதலால், சுவாச மாற்றத்தை அறிந்துகொள்வது அவசியமாகிறது.

சிறிய பித்தான் அளவுக்கு உள்ள ஒரு எலக்ட்ரானிக் கருவியை தாயின் வயிற்றுக்குள் செலுத்தி -- குழந்தையின் தலையில் மெதுவாக சென்று படிந்து கொள்ளுமாறு வைக்கிறார்கள்; குழந்தையின் சுவாசம் பற்றிய எல்லா விவரங்களையும் ஈர்த்து வெளியே அனுப்புகிறது இது; வெளியில் உள்ள ஒரு மீட்டரில் குழந்தையின் இருதயத் துடிப்பு பதிவாகிக் காட்டப்படுகிறது.

இதனுடன் இணைக்கப்பட்ட பிறிதொரு கருவி டாக்டரின் அறையில் இருக்கிறது; அங்கிருந்தபடியே குழந்தையின் மூச்சுத் துடிப்பை அவர் அறிந்துகொள்ள முடியும்; உடனடியாக ஏதாவது சிகிச்சை செய்யவேண்டுமானால் விரைந்து செயல்படலாம்.

வளர்ச்சியடையாத வட்டாரங்கள்

டில்லியின் கண்விழிப்பு

பம்பாய், நவ. 24—

நாட்டின் முழுமையான வளர்ச்சியின் பொருட்டுத் தேசிய அடிப்படையில் திட்டமிடுகையில், வட்டாரத் திட்டங்களையும் கவனிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

"சில வட்டாரங்கள் இன்னமும் வளர்ச்சியடையாமல் இருப்பதால், வளர்ச்சித் திட்டங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சரிப்படுத்த இம்மாதிரிக் கண்ணோட்டம் அவசியமாகிறது"

என்று நிதியமைச்சர் சவான் இங்கு குறிப்பிட்டார்.

நீர் மூழ்கிக் கப்பல்கள்

இந்தியாவிலேயே உருவாகும்

பம்பாய், நவ. 24—

"கடற்படையைப் பலப்படுத்துவதற்காக இந்திய அரசு இந்தியாவிலேயே சப்மரீன் (நீர் மூழ்கி)களைக் கட்ட எண்ணியுள்ளது; எம்மாதிரி சப்மரீன்களைக் கட்டுவது; எங்கு—எப்போது இதைத் துவக்குவது என்ற விவரங்கள் ஆய்வில் இருந்துவருகின்றன.

"பம்பாயிலும், விசாகப்பட்டினத்திலும் சப்மரீன்கள் கட்டவசதி இருப்பதாகத் தெரிகிறது"

என்று தற்காப்பு உற்பத்தித் துறைச் செயலாளர் ஜி.எல்.சேத்தி தெரிவித்திருக்கிறார்.

பலன் தரா மருந்துகள் கண்டறிந்து கூறுக!

மருந்தாளுநர்கட்கு அமைச்சர் க. அன்பழகன் வேண்டுகோள்

சென்னை, நவ. 22—

"எதிர்பார்க்கும் பலனைத் தாராத மருந்துகளை விற்பனைக்குக் கொண்டுவருவதில், மருந்தாளுநர்கள் மிகக் கண்காணிப்புடன் செயல்பட வேண்டும்.

"தரக் குறைவான மருந்துகளைக் கண்டுபிடிப்பது எளிது; பலன் தராத மருந்துகளைக் கண்டுபிடிப்பதுதான் கடினம்; எனவே, இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பலன் தராத மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் அரசுக்கு உதவவேண்டும்.

"தற்கால மக்கள், பெரும் அளவுக்கு மருந்துகளையே நம்பியிருக்கும் போக்கு வருந்தத்தக்கதாகும்"

என்று, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் இங்கு 10-வது மருந்தாளுநர்கள் தேசிய வாரக் கொண்டாட்டத்தின்போது கேட்டுக் கொண்டார்.

"நாட்டில் அவசரநிலை பிரகடனம் செய்யப்படுமானால் தமிழ்நாட்டில் மருந்து வியாபாரிகள் மருந்து விலை ஏறாது கட்டுப்படுத்துவர். மருந்துகளைக் குவித்து வைக்கவோ பெரும் இலாபம் சம்பாதிக்கவோ மாட்டார்கள்"

என்று தமிழ்நாடு மருந்து வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜி. ஆர். சங்கர் உறுதியளித்தார்.

நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநர் பி. ஆர். பாலகிருஷ்ணன், அவசர நிலை ஏற்படக்கூடியதைக் குறிப்பிட்டு, 'அவசர நிலை காலத்தில் தரமான மருந்துகளே விற்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

"சில வகை மருந்துகளுக்குச் சிலர் அடிமையாகி வருகின்றனர்; அவ்வகை மருந்துகளை டாக்டர்கள் சீட்டு இருந்தால் கொடுக்கப்படும் என்ற முறையை வியாபாரிகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்" என்றும் அவர் மேலும் கூறினார்.

"நீரழிவு நோய்க்கு வேண்டிய இன்சூலின் ஊசி மருந்துக்கு அண்மையில் மூலப் பொருள் பற்றாக்குறை காரணமாக தமிழ்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டது" என்றும் அவர் சொன்னார்.

சென்னை நகரில் இருட்டடிப்பு ஒத்திகை

மூன்று கட்டங்களாக நடத்தத் தமிழக அரசு முடிவு

மக்களின் கடமைபற்றி அறிவிப்பு

சென்னை, நவ. 24—

சென்னை நகரில் இத்திங்கள் 27-ம் நாள் சனிக்கிழமை இரவு 7-மணியிலிருந்து 9-மணிவரையில் இரண்டு மணி நேரத்திற்கு இருட்டடிப்பு ஒத்திகை நடத்தப்படும்; இந்த இருட்டடிப்பு ஒத்திகையை மூன்று கட்டங்களாக நடத்தத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

அதன்படி, 27-ம் நாள் நடப்பது முதல் கட்ட ஒத்திகை; முன்கூட்டியே நாளும் -- நேரத்தையும் அறிவித்து அந்த நாட்களில் அரை மணி நேரம்முதல் ஒரு மணி நேரம்வரையில் நடத்தும் இருட்டடிப்பு ஒத்திகை இது.

இரண்டாவது கட்டத்தில், நாளும் -- நேரமும் அறிவிக்காமல் மூன்று நாள் முன்னறிவிப்புக் கொடுத்து ஒரு நாள் இருட்டடிப்பு ஒத்திகை நடத்தப்படும்.

மூன்றாவது கட்டத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றித் திடீரென இருட்டடிப்பு ஒத்திகை நடத்தப்படும்.

முதல் கட்டமாக சனிக்கிழமை இரவு 7-மணிமுதல் 9-மணியளவில் நடைபெறும் இருட்டடிப்பு ஒத்திகையின்போது தெரு விளக்குகள் அனைத்தும் அணைக்கப்படும்.

சென்னை நகரிலும் -- சென்னையைச் சுற்றி உள்ள புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பொது விளக்குகள் -- தெரு விளக்குகள் அனைத்தும் அணைக்கப்படும்.

சென்னை நகரிலும் -- புறநகர்ப் பகுதிகளிலும் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்கு மேலே அல்லது வெளியே உள்ள அலங்கார விளக்குகள் -- காம்பவுண்டில் உள்ள ஒளி விளக்குகள் ஆகியவற்றை அணைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

வீட்டுக்குள் எரியும் விளக்கு வெளிச்சம் வெளியே தெரியாதபடி ஜன்னல்களுக்குத் திரைச் சீலைகள் போட்டு மறைக்கும்படியும் கோரப்படுவார்கள்.

மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், சைக்கிள் போன்ற வாகனங்களில் செல்வோர், அவற்றின் விளக்கு வெளிச்சம் பிரகாசமாகத் தெரியாதபடி அரை வட்ட வடிவ மறைப்புச் செய்யவேண்டும்; கண்ணைப் பறிக்கும் பிரகாச வெளிச்சம் போடாமலும் -- அது எதிர் வீசாமலும் தடுக்க முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

இருட்டடிப்பு ஒத்திகை ஆரம்பமாவதற்கு முன்பு சங்கு ஊதப்படும்; சங்கு ஊதும் சத்தம், ஏறி இறங்கும் வகையில் இருக்கும்; அல்லது தொடர்ந்து 5 வினாடிகளுக்குக் குண்டு வெடிப்பது போன்ற வெடிச் சத்தம் கிளப்பப்படும்.

இருட்டடிப்பு ஒத்திகை முடிவுற்றதை அறிவிக்க நாய் அலறுவதுபோல 2-நிமிடம் சங்கு ஒலிக்கும்.

காஞ்சியில் கலைஞர் கருணாநிதி விளையாட்டரங்கம்

ரூ. 7 இலட்சம் செலவில் உருவாகிறது

காஞ்சிபுரம், நவ. 22—

காஞ்சிபுரத்தில் ரூ. 7 இலட்சம் செலவில், புதிய 'ஸ்டேடியம்' ஒன்றைக் கட்டும் பணி, கடந்த வெள்ளியன்று முறைப்படி துவக்கிவைக்கப்பட்டது.

இந்த ஸ்டேடியத்திற்கு, 'கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

"மாவட்ட நல்வாழ்வுக்குழு திரட்டிய பணத்தைக் கொண்டு கட்டப்படும் இந்த ஸ்டேடியம், இன்னும் 6 மாத காலத்திற்குள் தயாராகிவிடும்"

நாடாளுமன்றம் கூடும் நேரத்தில் அவசரச் சட்டமா?

மக்களவையில் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 23—

நாடாளுமன்றம் கூடவிருக்கும் சமயத்தில் பல அவசரச் சட்டங்களை முக்கியமாகப் புதிய வரிகளை விதிப்பது குறித்து அவசரச் சட்டத்தைப் பிறப்பித்ததற்கு மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அஞ்சல் கட்டணம், இரயில்வே கட்டணம், உள்நாட்டு விமானப் பயணம் ஆகியவைமீது வரி விதித்தது பற்றிய அவசரச் சட்டங்களுக்குப் பதில் மூன்று மசோதாக்கள் சபையில் கொண்டுவரப்பட்டபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

முதல் இரு மசோதாக்களை முன்மொழிவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவற்றின்மீது வாக்கெடுப்பை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர்; ஆனால் இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

சிக்கனமாகவும் துரிதமாகவும் வீடு கட்டும் பணி

பொறியியல் துறையினருக்கு அமைச்சர் க. இராசாராம் வேண்டுகோள்

சென்னை, நவ. 24—

சிக்கனமாகவும் -- விரைவாகவும் வீடுகள் கட்டுவதற்கான யோசனைகளைத் தெரிவிக்கும்படி வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், வீட்டு வசதி வாரியப் பொறியர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத் தொழில் நுட்ப அலுவலர் சங்கத்தை அமைச்சர் துவக்கி வைத்தார்.

ஆயுள் காப்பீட்டுக் கழக முதலீட்டு அதிகாரிகள் அண்மையில் தம்மைச் சந்தித்தபோது, 'தமிழ்நாட்டைவிட குஜராத் மாநிலத்தில் துரிதமாகவும் சிக்கனமாகவும் வீடுகள் கட்டப்படுகின்றன' என்று கருத்துத் தெரிவித்ததாகவும் அமைச்சர் கூறினார்.

"வீட்டு வசதி வாரிய வீடுகளை நன்கு பராமரிப்பதற்கெனவும், பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களைக் கவனிப்பதற்கெனவும் வீட்டு வசதி வாரியத்தில் தனிப் பிரிவு அமைக்கப்படும்" என்றார்.

இராம. அரங்கண்ணல்

குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் பேசுகையில், 'ரூ. 3.65 கோடி முதலீட்டில் எண்ணூரில் அமையும் செல்லுலர் காங்கிரீட் தொழிற்சாலை இரண்டு மாதங்களில் செயல்படத் தொடங்கும்' என்றார்.

டி. வி. வாசுதேவன்

வீட்டு வசதி வாரியத் தலைவர் டி. வி. வாசுதேவன் பேசுகையில், உருக்குப் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு குறைந்த அளவு உருக்கைப் பயன்படுத்தி வீடு கட்டுவதற்கான வழிவகைகளை ஆராயும்படி பொறியியர்களைக் கேட்டுக்கொண்டார்.

கே. ஆர். இராமசாமி

குடிசை வாரியத் தலைமைப் பொறியர் கே. ஆர். இராமசாமி, 'வீடு கட்டுவதில் புதிய முறைகளைக் கையாள வேண்டும்' என்றார்.

தொழில் நுட்ப அலுவலர் சங்கத் தலைவர் மரி ஜார்ஜ், துவக்கத்தில் அனைவரையும் வரவேற்றார்.

துணைத் தலைவர் வி. எஸ். இராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

மதிய உணவின்றி கல்வி பயிலும் ஏழை மாணவ--மாணவிகளுக்கு இலவச உணவு வழங்கும் திட்டம்

அமைச்சர் நெடுஞ்செழியன் தொடங்கிவைத்தார்

சென்னை, நவ. 24—

சென்னையில் உள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த ஏழை மாணவ -- மாணவிகள் 180 பேருக்கு இலவசமாக மதிய உணவு வழங்க சென்னை சுழற்குழு (ரோட்டரி சங்கம்) ஏற்பாடு செய்துள்ளது; இந்தத் திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ. 4,000 செலவிடப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி, ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழை மாணவர்களுக்கு மதிய உணவுக்காகும் செலவை ரோட்டரி சங்கம் கொடுத்துவிடுகிறது; அந்த மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து கல்லூரி விடுதியில் மதிய உணவு சாப்பிடலாம்.

இந்தத் திட்டத்தை சென்னை கன்னிமரா ஓட்டலில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நேற்று தொடங்கிவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"ஏழ்மையின் காரணமாக, மதிய உணவு சாப்பிடாமல் பட்டினி கிடந்து கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

"இந்தத் திட்டம் சென்னையிலுள்ள ஒரு சில கல்லூரிகளில மட்டும் இல்லாமல், மாநிலம் முழுவதிலும் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும் செயல்படுத்த ரோட்டரி சங்கத்தினர் முன்வர வேண்டும்.

"தமிழக அரசு, பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே உணர்ந்து -- அவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்தது.

அமெரிக்காவில் உள்ள 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள 30 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது; மற்ற பகுதிகளுக்கும் விரைவில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்."

விழாவுக்கு, சென்னை ரோட்டரி சங்க தலைவர் பால் தேவ்ஜி தலைமை தாங்கினர்,

ஜி. இராமசாமி, எஸ். எம். டயஸ் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் சண்முகநாதன், புதுக் கல்லூரியைச் சேர்ந்த ரசீத், ஆகியோரும் பேசினர்கள; எம். வி. அருணசலம் நன்றி கூறினர்.

அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள், சென்னைக் கல்லூரி நிர்வாகிகளிடம், மதிய உணவுக்கு ஆகும் செலவுக்கான பணத்தை வழங்கினர்.

சென்னை பால் வழங்கும் நிலையங்களில் நியாய விலைக்கு அரிசி விற்பனை

தமிழக அரசு ஏற்பாடு -- முதல் ரகப் பச்சரிசி, புழுங்கலரிசி தலா 5 கிலோ வழங்கப்படும்

சென்னை, நவ. 24—

"அரிசி விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் — நியாய விலையில் மக்களுக்கு அரிசி கிடைக்கச் செய்யவும் சென்னை நகரில் உள்ள மாதவரம் பால் பண்ணை பால் வழங்கும் நிலையங்கள் அனைத்தின் மூலமும் பச்சரிசி — புழுங்கலரிசி விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

"நகரில் மொத்தம் 200 பால் விற்பனை வழங்கும் நிலையங்கள் உள்ளன; இவற்றின் மூலம் அரிசி விற்கப்படும்; வரும் திங்கட்கிழமையிலிருந்து இவைகளின் மூலம் ஆளுக்கு அதிகபட்சம் 5 கிலோ வரையில் அரிசி நியாய விலையில் விற்கப்படும்.

"முதல் ரகப் பச்சரிசியின் விலை கிலோ ரூ. 1.14; முதல் ரகப் புழுங்கலரிசியின் விலை கிலோ ரூ. 1.08 என்று விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"தினமும் காலையில் 2 மணி நேரமும்—மாலையில் 2-மணி நேரமும் (பால் விற்பனை விநியோகத்திற்குப் பிறகு) இந்தப் பால் 'டெப்போ'க்களில் அரிசி விற்கப்படும்; ஒரு 'டெப்போ'வுக்கு ஒருநாளைக்கு ஒரு மூட்டை பச்சரிசியும் -- ஒரு மூட்டை புழுங்கலரிசியும் விற்பனைக்காகக் கொடுக்கப்படும்; இவை அந்த டெப்போக்களிலேயே உணவு இலாகா லாரி மூலம் கொண்டுவந்து கொடுக்கப்படும்; அரிசி விற்பனை செய்யும் பால் டெப்போ ஊழியருக்கு ஒரு மூட்டைக்கு ரூ. 2 கமிஷன் தரப்படும்.

மக்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக அரசு இந்த ஏற்பாட்டை மேற்கொண்டிருக்கிறது; இதில் தவறுகள் — முறைகேடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

என்.சி.சி.-க்குப் போர்க்காலப் பயிற்சி

இராணுவத்தினருக்கு உதவியாகப் பின்னணி உதவிகளைச் செய்வர்

சென்னை, நவ. 24—

"போர் மூளுமேயானால், இராணுவத்தினருக்குத் துணையாக நெருக்கடி நிலையில் -- போர்க்களப் பின்னணியில் உதவிகள செய்வதற்கான பயிற்சிகளை (செய்தித் தொடர்பு -- கண்ணி வெடிகள் கண்காணிப்பு -- இராணுவ சமிக்ஞைகள்) தேசிய மாணவர் படையினருக்கு அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

"என்.சி.சி. பயிற்சி பெற்ற பெண்களுக்கு மீட்புப் பணி -- முதலுதவிச் சிகிச்சை போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

"இந்தியா — பாகிஸ்தான் போரின்போது (1965-ம் ஆண்டு) என்.சி.சி. படையினருக்கு அளிக்கப்பட்ட -- இராணுவத்தினருக்கு உதவும் பின்னணிப் பயிற்சிகள் அனைத்தும் சிறப்பாக அளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று மாணவப் படை வட்டார அதிகாரி ஜே. சாட்டர்ஜி, செய்தியாளர்களிடம் கூறினர்.

நவ. 28 ல் சிறப்பு ஒத்திகை

என்.சி.சி. படை அமைக்கப்பட்டு 23 ஆண்டுகளாகின்றன; இதன் நிறைவு விழா, நவ. 28-ம் நாள் காலை 9 மணிக்கு, இராசரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெறும்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் ஆயிரம் என்.சி.சி. தொண்டர்களின் அணிவகுப்பு -- போர் ஒத்திகை -- விமான அணிவகுப்பு -- விமானப் படையினரின் போர்ச் சாதனைகள் ஆகியவற்றை விளக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அதிகாரி ஜே சாட்டர்ஜி, மேலும் தெரிவித்ததாவது:—

"கடந்த 2 ஆண்டுகளில் தமிழகத்தில் என்.சி.சி. படையினரின் பயிற்சி -- சேவை ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

என்.சி.சி பெண்கள் பிரிவில் மலினிபென் என்ற பெண் முதன்மையாக வந்திருக்கிறார்.

மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில் என்.சி.சி. கொடி இந்த ஆண்டு தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது,

1965-ம் ஆண்டில், இந்தியா -- பாகிஸ்தான் போரின்போது, என்.சி.சி. படையினர் இராணுவத்தினருக்கு உதவியாகப் போர்க்களப் பின்னணி உதவிகளைச் செய்தார்கள்; அதற்காக அவர்களுக்கு முன்பு தனிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன; அந்தப் பயிற்சி மீண்டும் இப்போது என். சி. சி.-யினருக்கு அளிக்கப்படும்.

தமிழகத்தில் என்.சி.சி. படையில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்ட மாணவ -- மாணவிகளின் எண்ணிக்கை 1,06,000; இதில் இதுவரையில் 96,000 பேர் சேர்ந்துள்ளனர்.

தேசிய மாணவர் படைக்காக (என்.சி.சி.) மாநில அரசு, ஆண்டுக்கு ரூ. 70 இலட்சமும், உடை -- பயிற்சி அதிகாரிகள் பராமரிப்புப் போன்ற வகையில் மத்திய அரசு ரூ 2 கோடியும் செலவிடுகின்றன."

நாட்டின் விடுதலையைப் பேணிக் காக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு

சென்னை, நவ. 24—

“நெருக்கடி நிலைமையைப் பாகிஸ்தான் பிரகடனப்படுத்தியிருப்பதைத் தொடர்ந்து நமது நாட்டின்மீது பாகிஸ்தான் படையெடுப்பு அபாயமும் — அதனுல் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து நேரிடும் நிலைமையும் தோன்றியிருக்கிறது.

“நாட்டின் பாதுகாப்பில் அனைவரும் கண்ணுங் கருத்துமாக — கவனமாக இருக்கவேண்டும்; நாட்டின் விடுதலையைப் பேணிக் காக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்பதை உணரவேண்டும்.

“நாட்டின் நலனில் அக்கறை உள்ள நாம் அனைவரும் துப்பாக்கி ஏந்தாத வீரர்களாக — இராணுவ உடை அணியாத சிப்பாய்களாக மாறிப் பகைவனை விரட்டியடிப்பதில் போராடத் தயாராக இருக்கவேண்டும்; கடமையாற்றும் சூளுரையினை ஏற்கவேண்டும்.

“ஆடம்பரத்தை — அனுவசியச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு, நமது நேரம் — நினைப்பு — அறிவு — ஆற்றல் அனைத்தையும் நாட்டின் பாதுகாப்புக்கு அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.”

— நாவலர் இரா. நெடுஞ்செழியன்

(சென்னை மாநகராட்சி 284-வது ஆண்டுத் தொடக்கத்தில்)

பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய வீரர்களுக்கு நாடாளுமன்றத்தில் பாராட்டு

புதுடில்லி, நவ. 24—

அடிக்கடி அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மூன்று பாகிஸ்தான் போர் விமானங்களை, இந்திய விமானப் படை வீரர்கள் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர்.

மொத்தம் நான்கு விமானங்கள் இந்தியப் பகுதியில் ஊடுருவிவந்தன; அவைகளை, இந்திய விமானப் படையைச் சேர்ந்த மூன்று ‘நாட்’ ரக விமானங்கள் துரத்திச் சென்று சுட்டு வீழ்த்தினர்; அதன் மூன்று விமானிகளும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் இந்தச் செய்தியைப் பாதுகாப்புத் துறைத் துணை அமைச்சர் சுக்லா அறிவித்ததும், உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய இந்திய இளம் வீரர்களை உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினர்.

பாகிஸ்தான் விமானங்களை இந்திய வீரர்கள் சுட்டு வீழ்த்தியது பற்றிப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம் குறிப்பிடுகையில், ‘இதிலிருந்து பாகிஸ்தான் சரியான பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்’ என்று கூறினுர்.

“இந்தியா போரை விரும்பவில்லை; ஆனுல், யாராவது போருக்கு வந்தால், இந்தியா சரியான பதிலடி கொடுக்கும் என்பதைப் பாகிஸ்தான் தெரிந்துகொள்ளட்டும்” என்று எச்சரித்தார்.

தலா ரூ. 1,000 பரிசு

பாகிஸ்தான் போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய இந்திய விமான வீரர்களுக்குத் தலா ரூ. 1,000 பரிசு வழங்குவதாக அமிர்தசரசு சிறு தொழில் கம்பளித் துணி உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் உளவாளிகள் பெரும் அளவில் கைது

கல்கத்தா, நவ. 24—

இராணுவத்தினர் — எல்லைப் பாதுகாப்புப் படையினர் — மேற்கு வங்கப் போலீசார் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, எல்லா மாவட்டங்களிலும் ஏராளமான பாகிஸ்தான் உளவாளிகளைக் கைது செய்திருப்பதாக இங்கு ஒரு அதிகாரி தெரிவித்தார்.

விடுதலை வீரர்கள் 22 எல்லைச்சாவடிகளைக் கைப்பற்றிவிட்டனர்

கிருஷ்ணநகர், நவ. 24—

வங்க தேசத்தில குஷ்தியா மாவட்டத்தில் 22 எல்லைச்சாவடிகளில் 21 சாவடிகளை விடுதலைப் படையினர் கைப்பற்றி விட்டனர். இந்த மாவட்டத்தில் 110 சதுர கிலோ மீட்டர் பகுதிகளை விடுதலைப் படை கைப்பற்றியிருக்கின்றனர்.

கிழக்கு வங்கத்தில் 3 பாகிஸ்தான் டிவிஷன்கள்

புதுடில்லி, நவ. 24—

கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 3 டிவிஷன்கள் இயங்குகின்றன; அவற்றுக்குத் துணை செய்யும் துருப்புகளும் — மற்ற படைகளும் உள்ளன.

இத்தகவல்களை தற்காப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்; பொது நலனை முன்னிட்டு, மேற்கொண்டு விவரங்களை வெளியிட மறுத்தார்.

சென்னை தீ விபத்து — ரூ. 10,000 உதவி

மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, நவ. 24—

சென்னை — யானைகவுனி பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதும் — 200 குடிசைகள் தீயில் வெந்து சாம்பலானதும் தெரிந்ததே.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதி செய்து கொடுக்கத் தலைமையமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 தரப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பை மத்திய அரசு நேற்று வெளியிட்டது.

சிவில் பாதுகாப்பு நடவடிக்கை

ஆலோசனை செய்யத் தமிழ்நாடு அதிகாரி டில்லிக்குப் புறப்பாடு

சென்னை, நவ. 24—

சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளையொட்டி, குறிப்பாகக் கடற்கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பு எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முக்கிய நிறுவனங்கள் அமைப்புகளுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது சம்பந்தமாகவும் ஆலோசனை செய்வதற்காகத் தமிழ்நாடு உயர் அதிகாரி ஒருவர் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

கங்கை — காவிரி இணைப்புத் திட்டம்

ஐ. நா. நிபுணர்களின் குழுவின் கருத்து இரண்டாவது முறையாகக் கோரப்படும்

நாடாளுமன்ற மேலவையில் அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, நவ. 24—

“கங்கை — காவிரி இணைப்புத் திட்டத்தை மேற்கொள்வது ஏற்புடையதுதானு என்பதுபற்றி ‘இரண்டாவது முறையாக கருத்துத் தெரிவிக்க ஐ. நா. நிபுணர்கள் குழு ஒன்று டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்தியாவுக்கு வரும்.

“இந்தியா இதுவரையில் மேற்கொண்டிராத அல்லது திட்டமிட்டிராத அளவு வேலை கங்கை — காவிரித் திட்டத்தில் செய்யப்படவேண்டியிருக்கும்; எனவே, இதுபற்றி ‘இரண்டாவது கருத்து’ கோரப்படுகிறது”

என்று மத்திய பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் நாடாளுமன்ற மேலவையில், கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

“இத்திட்டம் சம்பந்தமான ஒரு தொடக்க அறிக்கையை இந்திய எஞ்சினீயர்கள் ஏற்கனவே தயாரித்திருக்கின்றனர்; இந்தத் திட்டத்திற்காக ஆகக்கூடிய செலவுகளுக்கு ஏற்ற வகையில் இதனுல் பயன் விளையுமா என்பதே இப்போது எதிர்பார்க்கப்படுகிறது.

“ஐ நா. நிபுணர் குழு தனது கருத்தைத் தெரிவிகக மூன்று அல்லது நான்கு மாதங்கள் ஆகக்கூடும்; அக்குழு சாதகமான கருத்தைத் தெரிவித்தால், மத்திய நீர்ப் பாசன — மின்துறைக் குழு விரிவான ஆய்வை மேற்கொள்ளும்; இந்த ஆய்வு முடிய 10 ஆண்டுகள் பிடிக்கக்கூடும். 1980-ம் ஆண்டிலிருந்து தொடங்கும் பத்து ஆண்டுகளுக்குள் இத்திட்டம் பற்றிய வேலைகள் தொடங்கும்.”

கல்வி — உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

நவ. 26 காலை 10-மணி: அரூர்—விஞ்ஞானக்கூடம் திறப்பு; 11-30 மணி: அரூர்—உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மாநாடு; மாலை 3-மணி: சக்கிலிப்பட்டி—துவக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 4-15 மணி: குமாரப்பட்டி—துவக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 5-30 மணி: ஊத்தங்கரை—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு 7-15 மணி: அரூர்—பொது மக்கள் வரவேற்பு.

நவ. 27 காலை 8-30 மணி: மொரப்பூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 9-30 மணி: பிடாமனேரி—மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பு; 10-45 மணி: குண்டலப்பட்டி—மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பு; பிற்பகல் 12-45 மணி: பாலக்கோடு—ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பும்; 3-30 மணி: கிருஷ்ணகிரி—நகராட்சிப் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும் —நாளங்காடி அடிக்கல் நாட்டு விழாவும்; 5-மணி: கிருஷ்ணகிரி — ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் வேளாண்மைக் கிடங்குத் திறப்பு; இரவு 7-30 மணி: கிருஷ்ணகிரி — பொது மக்கள் வரவேற்பு.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிவிப்பு

புதுவை மாநிலத் தி.மு.க. தோழர்கள் கவனத்திற்கு:

புதுவை மாநிலத்தில் மாண்புமிகு அமைச்சர் இராமசாமி அவர்கள் வகித்துவந்த இலாகாக்களில் மாற்றம் ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றித் தி. மு. கழக நிர்வாகிகள் சிலரும் — கழகத் தோழர்களும், எதிர்த்தும் ஆதரித்தும் கையெழுத்துப பெறுதல் — பொதுக்கூட்டங்கள் நடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாகத் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இப்பிரச்சினை குறித்து ஏற்கனவே பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்துள்ள கருத்தை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் இராமசாமி அவர்களும் தமது எண்ணத்தை வெளியிட்டிருக்கிறுர்.

தலைமைக் கழகமும் இதுபற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது; கழகத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பிய பிறகு கலந்துபேசி தக்க முடிவும் எடுக்கப்படும்.

இதற்கிடையில், புதுவை மாநிலத்திலுள்ள தி. மு. கழகத் தோழர்கள் யாரும் இப்பிரச்சினைக்குச் சாதகபாதகமாகக் கருத்துக்களை அறிவிப்பதோ — கையெழுத்துக்களைப் பெறுவதோ — பொதுக்கூட்டங்களை நடத்துவதோ கூடாது என்பதையும், அவ்வாறு செய்வது கழகக் கட்டுப்பாட்டை மீறும் செயலாகும் என்பதையும், தலைமைக் கழகம் இவ்வறிக்கையின் வாயிலாக புதுவை மாநிலத்திலுள்ள கிளைக் கழக — வட்டக் கழக — மாவட்டக் கழக — சார்பு மன்ற நிர்வாகிகளுக்கும், கழகத் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

‘அறிவகம்’, சென்னை-13.
23—11—71

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர், தி. மு. க. (அமைப்பு)

ஆமில்டன் பாலம் திறப்பு

சென்னை மாநகராட்சி சார்பில் 25—11—71 மாலை 5 மணிக்கு மேயர் திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையில் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் முன்னிலையில், கல்வி — உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ள ஆமில்டன் பாலத்தைத் திறந்து வைப்பார்; வரவேற்பு: திரு. கே. கோவிந்தசாமி. 93-வது கோட்ட உறுப்பினர்.

அகதிகட்குத் துரோகம் செய்யத் துணிந்த ‘பாவி’கள்

கல்கத்தாவில் 16 பேர் கைது செய்யப்பட்டனர்

கல்கத்தா, நவ. 23—

வங்க அகதிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு அனுப்பப்பட்ட ரூ. 2 இலட்சம பெறுமான பால் பவுடரைக் கையாடியதாகக் கல்கததாவில் 16 பேர் கைது செய்யபபட்டனர்; இவர்களில் ஒருவர் முன்னுள் இராணுவ அதிகாரி ஆவார்; மற்றொருவர் பிரபல போக்குவரதது நிறுவனததின் அதிபர் ஆவார்.

ஏற்கனவே 110 பால் பவுடர் மூட்டைகளையும், 4 மோட்டார் வாகன ‘ஸ்டெப்னி’களையும் இந்தக் கும்பல் பல்வேறு இடங்களில் பதுக்கியதாகக் கல்கத்தா உதவிப் போலீசுக் கமிஷனர் தெரிவித்தார்.

இவற்றில் 24 பர்கானு டாப்சியா நகரில் உள்ள ஒரு மருந்துக் கிடங்கிலிருந்து 70 பால் பவுடர் மூட்டைகளும், சீல்டா போலீசு நிலையத்தின் பகுதியிலுள்ள ஒரு காய்கறிக் கடையிலிருந்து 2 பால் பவுடர் மூட்டைகளும் கைப்பற்றப் பட்டதாகவும், வேறோர் இடத்தில் ‘4 ஸ்டெப்னி’கள் மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினுர்.

கல்கத்தா நகரில் பல இடங்களில் திடீர்ச் சோதனை நடத்தியபோது 6 டிரக்குகளில் ஏற்றக்கூடிய அளவு பால் பவுடர் மூட்டைகளும் ஆட்சேபகரமான சில பதிவேடுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினுர்.

அறநிலைய அமைச்சர்

எம். கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

நவ. 25 மாலை 6-மணி: கோவை—கோட்டை சங்கமேசுவரர் கோயில் அடிக்கல் நாட்டு விழா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, ஆதிநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.